நாள்- 25.09.2023

Case No.OS.211/2010 (PW2 Cross)

PW.2- முருகேசன் –1,3 முதல் 5,16 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பெருமாந்தாங்கல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு யார் யாருக்கு எதற்காக நடக்கிறது என்று எனக்கு தெரியாது. நிலம் சம்மந்தமாக ஏதோ வழக்கு நடக்கிறது என்றுதான் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் யார் வாதி, யார் பிரதிவாதி என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை எப்போது எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதினார்களா என்று எனக்கு தெ ரியாது. குடும்பம் ஒன்றாக இருந்தது பற்றி தெரியும் சொத்தை யார் யார் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு வழக்கை பற்றி தெரியாது என்றும் பொய்யாக முதல் விசாரணை தயாரிக்கப்பட்டு அதற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2,6 முதல் 8 மற்றும் 10 முதல் 14 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் பெருமாந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். புருஷோத்தம ரெட்டியார் மகன்கள்தான் பாஸ்கர் ரெட்டி, பத்ராச்சல ரெட்டியார், வெங்கசாமி, சிவாஜி நாராயணன் மொத்தம் 4 பிள்ளைகள் . அவர்களுக்குள் குடும்ப சொத்துக்கள் மற்றும் பூர்வீக சொத்துக்கள் பிரிக்கப்பட்டதா என்றால் பிரிக்கப்படவில்லை. இன்றுவரையில் மேற்படி 4 நபர்களும் கூட்டுக்குடும்ப சொத்தை பாகம் பிரிக்கப்படாமல் கூட்டாக்கத்தான் இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள் . பாஸ்கர் ரெட்டியார் பெயரில் 4 ஏக்கர் 90 சென்ட் மற்றும் வீடும் , மனையும் பூர்வீக சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் பாஸ்கர ரெட்டியாரின் தனிப்பட்ட சொத்து இல்லை அது கூட்டுக்குடும்ப சொத்துதான் அவர் குடும்ப தலைவர் என்பதால் அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது.

மறுவிசாரணை– இல்லை.